# போலந்து நாட்டின் ஆஸ்விச்சு கிராம நினைவுகள்
# கேட்டவை மனிதனின் ஈனக்குரல்கள்

**பரிதிமதி**

ஆகஸ்ட் 2005 ல் நானும் என் துணைவியாரும் போலந்து தேசத்தில் கிளீவீஸ் என்ற இடத்திற்கு சென்றிருந்த போது, ஆஸ்ச்சுவிச்சு, பிக்கனியூ என்ற கிராமங்களுக்கு போய்வந்தோம். அங்கு பல நாடுகளிலிருந்து மனிதர்களை சிறைக்கைதிகளாக ஹிட்லர் என்ற கொடுங்கோலன் கொடுமைப்படுத்திய சிறைச்சாலைகளைக் கண்ட போது மனம் நெகிழ்ந்தோம். அதே தினத்தின் ஒரே இரவில் எனது மனக்குமுறல்களை வெளிப்படுத்திய சில உணர்வுகளே இந்தப் பாடல்களாக வெளிப்பட்டன. இந்தப் பாடல்களை இன்று படித்தாலும் நான் அடைந்த உணர்ச்சி வெள்ளத்தையும், மனித இனத்தின் கழிவிரக்க ஆழ்மனத்தின் குமுறலையும் உணரலாம். மிகுதியான வெறுப்பினை உணர்ந்தால் அவைகளே என் உணர்ச்சிகளின் வெற்றியாக நான் எடுத்துக் கொள்ள முடியும் என்பதனை இந்த முன்னுரையில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

| | |
|---|---|
| எனது குருஷேத்திரத்தின் பயணம் | 16, ஜூன், 1989 |
| கலிங்கத்தின் பயணம் | 24, ஏப்ரல், 1993 |
| போலந்தில் ஆஸ்ச்விச் பயணம் | 7, செப்டம்பர், 2005 |

**பரிதிமதி**

1. பார்போற்ற வாழ்ந்தவன் பேரரசன் அசோகன்
பார்போற்றியது அவனது வீரத்தையா விவேகத்தையா
பார்போற்றியது அவனது துறவறத்தையே
பார்போற்றியது அவனது தியாகத்தை அன்புமனத்தை.

2. கலிங்கத்தில் மட்டுமா சமர்கள் நடந்தன
உலகம் எங்குமே போர்க்களம் தானே
ஆயினும் கலிங்கத்தில் அசோகன் பார்த்தவை
தலையற்ற உடல்களும் நிணத்துடன் அங்கங்களும்.

3. அப்பொழுதே அவன்முடி வெடுத்தான் காருண்யத்தை
அன்புதான் இனியஊற்று அன்புதான் பெரியசக்தி
அன்புதான் துலாக்கோல் அன்புதான் பெரியகொள்கை
இன்றளவும் நாம்பார்க்கிறோம் அசோகசக் கரத்தை.

4. யார்கொடுத்தார் மனிதனுக்குக் கொல்லும் இச்சையை
பிறர்க்கின்னா செய்யாத இயல்பை வள்ளுவன்சொன்னானே
கலிங்கத்தின் காலத்தில் வாட்களும் வேல்களும்
கலிங்கத்தில் இறந்தவர் ஒருலட்சம் இருக்கலாம்.

5. கலிங்கத்தின் சமர் தேசத்தை அகலப்படுத்த
ஸ்ரீராமயுத்தம் இலங்கை சேனையுடனே
குருஷேத்திர யுத்தம் பங்காளிகள்மன வருத்தம்
அலெக்ஸாண்டரின் யுத்தம் பேரரசை நிறுவவே.

6. போலந்துஎனும் நாடு கிழக்கு ஐரோப்பாவிலே
உலகிலேயே பெரியசிறைச்சாலை ஆஸ்விச் கிராமத்திலே
உலகப்போர் மூளும்முன்பே வதை ஆரம்பம்
மனிதநேயமில்லாத நாஜி வர்க்கத்தினரால்.

7. அல்பேனியா நாடு என்பது ஜெர்மெனியாகும்
அதனிலே தோன்றிற்றான் ஹிட்லர் என்பவன்
மனிதநேயம் சிறிதுமில்லாத மாமன் னனாம்
யூதர்களை எல்லாம் அவன்கொல்ல எண்ணினான்.

8. போலந்து நாட்டு யூதர்களை சிறையெடுத்தான்
ஆஸ்விச் கிராமந்தன்னில் கொட்டகை யிலடைத்தான்
ஒருநாளைக்கு இருபதனாயிரம் கைதிகள் வந்தனர்
அவர்களையெல்லாம் வெவ்வேறு சிறையில்வதைத்தனரே.

9. தினம்தினம் ஒருபுகைவண்டி நிறையமனிதர்களாம்
அவரவர்களை வரிசையில் நிறுத்திப்பிரித் தெடுப்பார்களாம்
வலுவுள்ளவர்களை கடும்பனியில் வைப்பார்கள்
வலுவற்றவரையும் பெண்டிரையும் சுடுவார்கள்.

10. பத்துலட்சம் கைதிகள் மொத்தம் இறந்தவர்களாம்
பெண்டிரை பிறப்புறுப்பில் சோதனை செய்வார்கள்
மருந்தை ஊசியில் இட்டுஉடலை மரணமடையசெய்வர்
உணவில்லாமல் கைதிகளைக் கொன்றிடுவர்.

11. ஊனமுற்றவர் நோயாளிகள் விதிவிலக்கல்லவாம்
பெண்டிர் சிறுகுழந்தைகள் விதிவிலக்கல்லவாம்
முதியோர்கள் சிறுமியர்கள் விதிவிலக்கல்லவாம்
எல்லோரையும் கொன்றிட்டு எரியூட்டினரே.

12. வண்டிவண்டியாய்க் கைதிகள் தினம் வருவர்
வண்டிவண்டியாய்ப் பிணங்களாய்த் திரும்புவரே
எல்லோருடைய உருவங்களும் சித்திரமாக
வைத்திருக்கிறார்கள் அத்துணைபேருமே அமரர்களானர்.

13. பசியால்ஒருவர் இறக்கும்போது எத்துணை கொடுமை
நின்றுகொண்டே இறப்பது எத்துணை கொடுமை
காலனின்பணியை எளிதாக்கவா இந்த முயற்சி
மனிதநேயம் பறிபோனதைக் காட்டவா இந்தமுயற்சி.

14. எத்தனை பயணப்பெட்டிகள் அவர்திருநாமத்துடன்
எத்தனை காலணிகள் கைதிகளைப் பறைசாற்றிட
வைக்கோல் படுக்கைகளில் மானுடரின் அவலம்
ஆடையின்றி படுங்குளிரில் மரணம் எய்தினர்..

15. மரணச்சுவர் என்ற பெயரிட்ட இடத்தைப்பார்த்தேன்
வரிசையாக நிறுத்தியே துப்பாக்கியில் சுட்டனராம்
ஒவ்வொன்றாக சுட்டெரிக்க இடமில்லையேல்
கூட்டாக அவர்களைப் பூதியில் இட்டனரே.

16 அழகான உருவங்களைக் சித்திரத்தில் பார்த்தோம்
அவலமாக இறந்திருக்கிறார்கள் அனைவருமே
மனிதனாய்ப் பிறந்தவன் ஒருநாள் சாகவேண்டுமே
அதற்காக இப்படியாக மரணமடைய வேண்டும்?

17. சிறைச்சாலைக்கு வந்த கடிதங்கள் ஏராளம்
சிறைச்சாலையில் நீநலமா என்று கேட்டால்
எப்படிப் பதில் சொல்வான் அக்கைதி தான்
பதில் சொல்லும் நிலையில்தான் அவனில்லையே.

18. இரண் டடிககும் சிறியதாக சிறையறைகள்
இரண் டிரண்டு நான்காக கைதியர்கள்
நின்று கொண்டே இருக்கவேண்டும் எப்பொழுதும்
பசிமிகுந்து நாவறண்டு உயிர்விடவேண்டும்.

19. கண்ணாடிக் கூட்டங்கள் ஒருஅறையில் கண்டேன்
கண்ணாடிகள் இணைந்து கிடந்தன குவியலாக
ஆத்துமாக்கள் இணைந்து பிரிந்ததைக் காட்டிடவே
மூக்குக் கண்ணாடிகள் சேர்ந்திருந்து சிரித்தனவா.

20. பிர்க்கனோ என்ற இடத்தைப் பார்த்தேனே
இந்தஇடம் பலமுறை படங்களில் பார்த்திருக்கிறேன்
அமைதியாக அந்த இரயில்பாதை இன்றும் நிற்கிறது
இந்தப்பாதையிலா மனிதக் கூட்டம் வந்திறங்கியது.

21. புவியன்னை நாணிக்கோணி நின்ற இடமாகும்
செவியிலே கேட்டவர் மறுகுவர் இதைநினைக்கின்
ஆயிரமாயிரம் மக்கள் சடலங்களாக மாறுவதற்கா
இந்த இரயில்களில் ஏறினாரா தங்கள் ஊர்களில்.

22. குதிரை இலாயங்களைப்பற்றி நாம் கேட்டிருக்கிறோம்
குதிரை இலாயங்களில் ஆயிரமாயிரம் கைதிகளாம்
தரையெல்லாம் களிமண்ணாம் சகதிகளாம்
கொட்டடை வெளியெல்லாம் பனிமலைகளாம்.

23. குளிரில் மயில்நனை யாமல்போர்வை கொடுத்தான்
பேகன் என்னும் பெருமன்னன் தமிழ்மண்ணில்
குளிரிலேயே மரணமடைய வகைசெய்தவன்
இந்த மனிதகுலத்திலா பிறந்துகொடுமை செய்தான்.

24. கரப்பான்கள் கொசுக்களுக்கு மருந்து அடிப்பார்
மூச்சடைத்து உடல்குன்றி சாவதற்கே
மனிதர்களை மருந்தடித்துக் கொல்வதற்கே
இருந்த குழாய்களைப் பார்த்தபோது மனம்வெந்ததே.

25. பதினைந்து இலட்சம் மனிதர்கள் மரணமடைந்தனரே
இதிகாசத்தில் பெரிய சுடுகாடு ஆஸ்சுவிச்சு
இதையெல்லாம் நான் வருங்காலத்தில் நினைப்பேனா
இவையெல்லாம் நடக்காமலிருக்க தடுப்பேனா.

26. குருஷேத்திரமாம் புனிதஇடம் போயிருக்கிறேன்
கீதைபிறந்ததனால் அந்தஇடத்தை நமஸ்கரித்தேன்
எனது வணக்கங்களனைத்தும் இறந்த ஆத்துமாக்களுக்கா
இதுபற்றி இப்பொழுது யோசிக்கத்துவங்கி யிருக்கிறேன்.

27. காந்தி யெனும்தேசப் பிதாஇறந் ததற்குநாம்
சாந்தியினைத் தரவேண்டிப் பிரார்த்தித்தோம்
பதினைந்து இலட்சம் மக்கள் மடிந்த இடத்தை
தரிசனம் செய்துபிரார்த்திக்க இறைவன் அருளினானே.

28. மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை களைஅறிவோம்
பிறர்துக்கத் தில்மனமகிழ்ச்சி யடைவது பற்றியும்அறிவோம்
இத்துணை உயிர்களைப் பறித்துமகிழ்வது பற்றிஅறியோம்
அதையும் கண்டுவிட்டோம் ஆஸ்சுவிச்சு கிராமந்தன்னிலே.

29. நெதர்லாந்து இத்தாலி யூகோஸ்லேவியா ஹங்கேரி
பிரான்ஸு ஆஸ்திரியா எல்லாநாட்டின் கைதிகளாம்
மந்தைமந்தை யாகமனித உயிர்பறிக்கப்பட்ட கொடுமை
சந்தையிலே சிதர்கின்ற குப்பைகளைப் போலே.

30. இவையெல்லாம் நடத்தியவர்களும் மனிதர்தானே
அவர்களுக்கும் ஒருநாள் இவைநடக்கலா மல்லவா
அதையேன் அவர்கள் எண்ணிப்பார்க்க மறந்தனர்
இதுதானே விதியென சாற்றுவரே பெரியர்.

31. கிராக்கோவில் நான்பார்த்தேன் யூதர்களின் கோயில்
அதுபோலே போலந்தில் எத்துணையூதர் இருந்தனர்
புல்லெனவே அனைவரையும் சித்திரவதை செய்த
கொடுமைகள் நடந்ததெல்லாம் ஆஸ்விச்சிலன்றோ.

32. துவக்கத்தில் நான்ஏன் கலிங்கத்தை நினைத்தேன்
பாரதத்தில் போர்கள் நடந்தவை புதிதன்று
நூதனமாய்க் கண்டேன் மனிதக்கொலைகளை
சரித்திரம் நிலைத்திருக்கும் இக்கொடுமையைநாம் மறவோம்.

33. மனம்என்று உண்டுஅதுநம்ப மறுக்கிறதன்றோ
ஆனாலும் உண்மைஎன்பதை நாம்கண்டோம்
எத்துணை கழிப்பறைகள் எத்துணை படுக்கைகள்
எத்துணை பாத்திரங்கள் எல்லாமும் நிசமே.

34. போகுமுன்நான் நினைத்தேன் கல்லறைகள் எனவே
மாறிவிட்டது எண்ணங்கள் யாரும்புதைக்கப்படவில்லை
அழலூட்டினரே பாவிகள் உடல்களுக்கு
எத்தனை இதயங்கள் எரிந்து பூதியானதே.

35. யூதர்கள் யாரும் மன்னிக்க மாட்டார்கள்
ஜெர்மானியர்களின் இந்தக் கொடுஞ்செயலாற்றலை
மனிதகுலமே மன்னிக்க இயலாக் கொடுமையைக்கண்டோம்
உண்மையில் நடந்ததைப் பார்க்கநான் பிறக்கவில்லை.

36. நானும் அந்தஉயிர்களில் ஒன்றாக இருந்திட்டால்
அப்பப்பா என்உடம்பு நடுக்கம் தருகிறதே
கண்டிப்பாக இதையாரும் அனுமதிக்க மாட்டார்
அவர்களனைவருக்கும் நான் தருவேன் ஒருசொட்டுக்கண்ணீர்.

37. இனிவரும் நாட்களில் அவர்களுக்காகப் பிரார்த்திப்பேன்
ஏனென்றால் ஒருசித்திரத்திலும் நான்துயரத்தைப் பார்க்கவில்லை
சிரித்தமுகத்துடன் எத்தனை மகளிர் சிறார்கள்
கடுகளவாகப் பெயர்கள் இலட்சோப லட்சங்கள்.

38. அரசர்கள் வரலாம் தலைவர்கள் வரலாம்
கொடுங்கோலர்கள் மட்டும்வரவே கூடாதே
ஆவதென்ன என்றுநினைத்துப் பார்க்கும் முன்பே
அணுகுண்டு பிரளயங்கள் நிகழ்ந்து விடுகின்றனவே.

39. சிபிஎன்ற சோழமன்னன் புறாவுக்குத் தசையீந்தான்
குமணன் என்றவள்ளல் தன்தலையையே தரமுயன்றான்
பசிபோக்க அட்சயபாத்திரமும் தந்தனர் பெரியோர்
அதையெல்லாம் பார்க்கையில் தலைகுனிவு நமக்கே.

40. வருவார்கள் போவார்கள் மனிதகுலத்தில் மக்கள்
செருவென்று போவார்கள் மனிதநேயத்தை மிதித்தே
தியாகங்கள் செய்வோம் பிறர்க்கு உதவுவோம்
என்னாளும் இதுபோன்ற கொடுமைகள் வேண்டா.

41. சீர்தூக்கிப் பார்த்திடடா மானுடப் பதரே
ஞாலம் பெரிதென்று உணர் நன்மைசெய்வாய்
மனித நேயம் எப்பொழுதும் பெரிதேயாகும்
சுயநலமே பெரிதென்று எண்ணிடாதே நீயே.

42. காலச் சக்கரத்தில் நீ மேலே இருக்கலாம்
எளிய வரும்பலஹீனரும் குறைந்திருக்கலாம்
இறைவன்முன் எல்லோரும் ஒன்றேயாகும்
அதனாலே உன்னைநீ பெரிதென்றிடாதே.

43. மாயமே மனிதவாழ்க்கை நீர்க் குமிழியே
நாளைநீ தளர்ந்திடுவாய் வலிவி ழப்பாய்
அதனாலே இன்றுநீ பிறரை மதித்துவாழ்
இதனையே எம்மதமும் பகர்ந் திட்டதே.

44. கலிங்கத்துப் பரணி படித்துள்ளேன் பயந்ததில்லை
ஆஸ்ச்சுவிச்சு கிராமத்தைப் பார்த்தேன் பயந்துவிட்டேன்
அஞ்சுவது அஞ்சல்அறிவார் தொழில்என உணர்ந்தேன்
எனதுஉயிர் உள்ளளவும் அவர்களுக்கே பிரார்த்திப்பேன்.

45. காலிழந்து தலையிழந்து முடமாக நின்றவை
பிராணிகள் மனிதர்கள் கலிங்கத்துப் பரணியிலே
கால்தலை யெல்லாம் நன்றாக இருந்து
பசியாலும் வலியாலும் இறந்தவர் ஆஸ்ச்விச் பரணியிலே.

46. கூற்றுவனே இந்தமுறைகளை ஏன் கையாண்டாய்
எரிமலையும் சுனாமிகளும் போதவில்லையா
இயற்கையில் மரணமடைவது இறைவன் இச்சை
பசிக்கொடுமை யில்சித்திர வதைமனித இச்சை.

47. கிறித்துவசமய போப் பால்போலந்து நாட்டினராம்
இந்தத்துயரங் களைப் பார்த்ததனால் மதத்தலைவனானாரோ
சகிப்புமனம் அதிகம் வேண்டுமய்யா இந்தப்
பாரினில் கசடர்கள் மிலேச்சர்கள் அதிகமானதினால்.

48. போதுமடா ஆங்காரம் பேராசைஇவை களெல்லாம்
ஆசையே மனதின்துக்கத் திற்குக் காரணமாகும்
என்றுபுத்த பிரான் கண்டதுமிக உண்மையே
அதைப் போற்றி அசோகமன்னன் பெரியவரானார்.

49. மதம்என்ற பெயரால் அட்டூழியங்கள் செய்வர்
இனம்என்ற பெயரால் அட்டூழியங்கள் செய்வர்
சீவன்போன பிறகுஉடல் ஒன்றுதா னென்று
அறியாமல் செய்வதனால் மன்னிக்க லாகுமோ.

50. ஆத்மமலம் கண்மமலம் என்றுநூறாறு மலங்கள்
எல்லாமே மனத்தின் வக்கிரத்தைச் சுட்டிடவே
அநீதிஇழைக் கப்படுகின்றன வேறுவேறு கோலங்களில்
இழைக்கப் பட்டவை அடிச்சுவடுகளை விட்டுச்செல்கின்றனவே.

51. வானகமே வையகமே இவர்களை மன்னிக்கமுடியுமா
இயேசுகூறியபடி இவர்கள் தவறுசெய்வதை உணரவில்லையா
கொன்றவனும் மடிந்துவிட்டான் கைதிகளும் மடிந்துவிட்டார்
இக்கொடுமை களைபறை சாற்றுவது சரித்திரமே.

52. வருபவர்கள் தினம் ஏராளமாம் மனிதர்கள்
மலர்க் கொத்துகள் இட்டுமௌனம் சாதிப்பர்
ஒருநிமிடம் சிந்தனையை மறக்கிறார்கள்
அறுபது வருடம் பின்னோக்கிச் செல்கிறார்கள்.

53. நரசிம்ம பல்லவன் வாதாபியை யழித்தானே
அனுமன் வாலால் இலங்கைக்கு தீமூட்டினானே
கட்டபொம்மனும் கடைசிவரை போரிட்டானே
இவைகளெல்லாம் ஆஸ்ச்விச்சு முன்பு சிறிதாகிவிடுமே.

54. முள்வேலி தனில் மின்சாரம் பாய்ச்சிடுவர்
தப்பித்து ஓடினால் அவர்குடும்பத்தை பலியிடுவர்
மனிதராகப் பிறந்ததே பிரச்னை ஆகிவிட்டதே
மரணஓலம் சன்னமாக இன்றும் கேட்கின்றதே.

55. பாரதபூமியில் பிறந்ததில் நான்பெருமை யடைகின்றேன்
அகிம்சைச் சக்தியை உலகுக்கு காட்டியவர்கள்நாம்
இந்தியன் என்றுபீடு நடைபோட முடிகின்றதே
ஏனெனில் நாம்பிறர்க் கின்னாசெய் வதில்லை.

56. மறுபடியும் நான்போலந்து நாடு வருவேனா
இருப்பினும் நான்இந்த நாட்டை மறவேனே
சகிப்புத் தன்மையுடன் அமைதியாக மனிதவதைகள்
நடந்ததைக் கேட்காமல் வாழ்ந்திருப்பாரே.

57. அரனாரே நமக்கெல்லாம் அழிக்கும் தெய்வம்
அவர்நடன மாடியஊழி நடனம் இதுதானா
அப்படித்தான் நான்நினைத்து தேற்றிக்கொள்கிறேன்
இதுகனவே மறந்துவிடு எனத்தேற்றிக் கொள்கிறேன்.

ஆலகால அண்ணலுக்கு இந்த காவியத்தை நான் சமர்ப்பிக்கும் அன்பன்

**பரிதிமதி.**

பரிதிமதியின் படைப்புகளில் இந்த உணர்ச்சிக் காவியம் மிகவும் வேறுபட்டதாகும். அவர் இதுவரை பிறருக்கு உதவுவதே வாழ்க்கையின் குறிக்கோளாகவும். அகிம்சை வாழ்க்கை, கோள்சொல்லாமை, காந்தியமுறை வாழ்க்கை, பெரியோரிடம் தாழ்மை, ஆசிரியரிடம் பணிவன்பு, நாணய வாழ்க்கை, தந்தை தாய்பக்தி என்ற வாழ்க்கை விதிமுறைகளுடன் வாழ்வதால், அவர் மனதின் உணர்வுகளை இந்தக் காவியத்தில் வெளியிட்டது அவருடைய தன்னடக்கத்தையும், மனித குலத்தில் அவருடைய பற்றையும், கூடவே நாட்டுப் பற்றையும் காட்டுகின்றன. இந்தப் படைப்பை நான் பாரத நாட்டிற்கும், பாரதத்தாயின் திருவடிக்கும் சமர்ப்பிக்கிறேன்.

**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்**
**மாணாசெய் யாமை தலை.**

**தன்னுயிர்க்கு இன்னாமைதான் அறிவான் என்கொலோ**
**மன்னுயிர்கு இன்னா செயல்.**

(துறவற இயல்) **திருவள்ளுவர்**.